## ‘ஜாடிக்கேற்ற மூடி’ மாதிரி, மோடிக்கேற்ற முரட்டு அடிமையாக எடப்பாடி பழனிசாமி இருக்கிறார்!

# எடப்பாடி பழனிசாமியையும் - அவரது அடிமைக் கூட்டத்தையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டிய தேர்தல், 2026 சட்டமன்றத் தேர்தல்!

## விராலிமலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!





**விராலிமலை,ஏப்.7 –**

**புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலையில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், விராலிமலை சட்டமன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் கே.கே.செல்லபாண்டியன் அவர்களுக்கு உதய சூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்து நேற்று முன்தினம் பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**அப்போது அவர், ``ஜாடிக்கேற்ற மூடி என்று ஊரில் ஒரு பழமொழி சொல்வார்கள். அது மாதிரி இன்றைக்கு மோடிக்கேற்ற ஒரு அடிமையாக எடப்பாடி பழனிசாமி இருக்கிறார். எடப்பாடி பழனிசாமியையும் அவரோடு கூட இருக்கக்கூடிய அடிமைக் கூட்டத்தையும் இந்தத் தேர்தலோடு வீட்டுக்கு அனுப்ப வேண்டிய தேர்தல் வரப்போகும் சட்டமன்றத் தேர்தல்” என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

முதலில் இவ்வளவு சிறப்பான, எழுச்சியான, அன்பான வரவேற்பு கொடுத்திருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருகின்ற 23-ஆம் தேதி சட்டமன்றத் தேர்தல். நான் கடந்த ஒரு வாரமாக தமிழ்நாடு முழுதும் சுற்றுப்பயணம் செய்து ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியாகச் சென்று, அங்கு மக்களைச் சந்தித்து, நம் கட்சி நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், இளைஞர்கள், தாய்மார்கள் எல்லாரையும் சந்தித்து வாக்கு கேட்டுக் கொண்டிருக்கிறேன். மீண்டும் தி.மு.க ஆட்சி அமைக்கப்போவது உறுதி.

### தி.மு.க–வின் கோட்டை

இந்த புதுக்கோட்டை மாவட்டம் என்றைக்குமே தி.மு.க-வின் கோட்டை என்பதை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும். கடந்த சட்டமன்றத் தேர்தலில் புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கின்ற ஆறு தொகுதிகளில் ஐந்து தொகுதிகளில் நாம் வெற்றி பெற்றுவிட்டோம். இந்த விராலிமலை மட்டும் கடந்த முறை நாம் தவறவிட்டுவிட்டோம். இந்த முறை தவறவிடாமல் வெற்றிபெற்றுக் காட்டி, புதுக்கோட்டை மாவட்டம் 100 சதவிகித வெற்றி என்பதை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

நம் வெற்றி வேட்பாளர், தலைவர் அவர்களால் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கக்கூடிய அண்ணன் செல்லப்பாண்டியன் அவர்களை உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற வையுங்கள் என்று உங்களிடம் கேட்கலாம் என்று வந்தேன். ஆனால், உங்களின் எழுச்சியைப் பார்க்கும்போது நீங்களெல்லாம் ஏற்கனவே முடிவு செய்துவிட்டீர்கள், வெற்றியை உறுதி செய்துவிட்டீர்கள் என்பது தெரிகிறது. உதயசூரியன் சின்னத்தில் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து அவரை சட்டப்பேரவைக்கு நீங்கள் அனுப்ப வேண்டும்.

### மிக முக்கியமான தொகுதி

இந்த விராலிமலை தொகுதி மிக மிக முக்கியமான தொகுதி. அதனால்தான் இந்த முறை எந்த விதத்திலும் நாம் தவறவிட்டுவிடக் கூடாது, வெற்றி வாய்ப்பை இழந்துவிடக் கூடாது என்று ஒரு நல்ல வேட்பாளரை, நம் செல்லப்பாண்டியன் அவர்களை, தலைவர் அவர்கள் உங்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். மாவட்டக் கழகச் செயலாளரை இங்கே நிறுத்தியிருக்கிறோம். தமிழ்நாட்டில் 234 தொகுதிகள் இருந்தாலும், இந்த விராலிமலைத் தொகுதியின் வெற்றி மிக, மிக முக்கியமான வெற்றி என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

நானும் ஒரு வேட்பாளர். சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் வேட்பாளராக நிற்கிறேன். தலைவர் அவர்கள் எனக்கும் ஒரு வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் என் தொகுதிக்கு நான் இதுவரைக்கும் ஒரு நாள்தான் வாக்கு கேட்டுப் போயிருக்கிறேன். ஏன்? என் வெற்றியை விட அண்ணன் செல்லப்பாண்டியன் அவர்களின் வெற்றி, இந்த விராலிமலைத் தொகுதியின் வெற்றி மிக, மிக முக்கியமான வெற்றி என்பதற்காகத்தான் உங்களையெல்லாம் தேடி வந்திருக்கிறேன்.

யார் அண்ணனை எதிர்த்து நிற்கிறார் என்று உங்களுக்குத் தெரியும். ‘குட்கா’ புகழ் விஜய பாஸ்கர் நிற்கிறார். இங்கே தேர்தல் அறிவித்த நாளிலிருந்து ஒரு நாடகக் கம்பெனி போலத் தினமும் ஏதாவது ஒரு காட்சியை காட்டிக் கொண்டிருக்கிறார். அவரை நம்பாதீர்கள், தேர்தல் முடிந்தவுடன் காணாமல் போய்விடுவார். உங்களை ஏறிட்டுப் பார்க்க மாட்டார். அதற்குப் பிறகு அவருக்கு இருக்கின்ற குவாரி தொழிலைப் பார்க்கப் போய்விடுவார். குட்கா விற்பனைக்குத் துணை போய் இன்று சி.பி.ஐ வரைக்கும் அலைந்துகொண்டிருக்கிறார். இந்தக் கூட்டணியை அவர்கள் அமைத்ததே, அதி.மு.க. கூட்டணி அமைத்ததே சி.பி.ஐ, அமலாக்கத்துறை இவர்களையெல்லாம் வைத்து மிரட்டித்தான், விஜயபாஸ்கர் போன்ற அடிமைக் கூட்டத்தை மிரட்டித்தான் இன்று பா.ஜ.க. மீண்டும் தமிழ்நாட்டுக்குள் நுழையப் பார்க்கிறது. அதனால்தான் மீண்டும் சொல்கிறேன். அண்ணன் செல்லப்பாண்டியன் அவர்களைப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் வெற்றி பெற வைக்க வேண்டும்.

நம் திராவிட மாடல் அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் எத்தனையோ திட்டங்களைச் செய்து கொடுத்திருக்கிறோம். இன்று நான் கடந்த ஒரு வாரமாகப் பல்வேறு தொகுதிகளுக்குச் செல்கிறேன். இன்று நம் தலைவர் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு தொகுதிகளுக்கு சென்று மக்களைச் சந்தித்து வாக்கு கேட்டுக் கொண்டிருக்கிறார். எந்தத் தைரியத்தில் மக்களைச் சந்திக்கப் போகிறோம். ஒவ்வொரு தொகுதிக்கும் தேவையான திட்டங்களை நம் அரசு கொடுத்திருக்கிறது என்கின்ற நம்பிக்கையில் செல்கிறோம்.

### விராலிமலை திட்டங்கள்

இந்த விராலிமலைத் தொகுதிக்கு பல்வேறு திட்டங்களை நம் திராவிட மாடல் அரசு செய்திருக்கிறது. 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 30 கிலோ மீட்டருக்குத் தரமான சாலைப் பணிகளை நம் அரசு செய்து கொடுத்திருக்கிறது.

17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விராலிமலை மற்றும் அன்னவாசல் ஒன்றியங்களில் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. சுமார் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இலுப்பூர் பேரூராட்சியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது.

சுமார் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சித்தன்னவாசல் பகுதியை, சுற்றுலாத் தலமாக மாற்றும் முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. அரசு தொழில்பயிற்சி நிலையத்தில் புதிய விடுதி கட்டடங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறோம்.

சுமார் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெருமாநாடு மற்றும் புல்வயல் ஊராட்சியில் உள்ள பள்ளிகளுக்கு இன்று புதிய வகுப்பறைக் கட்டடங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். விராலிமலை சார்பதிவாளர் அலுவலகத்துக்குப் புதிய கட்டடங்கள்.

கொடும்பாலூர், பரம்பூர், பூதக்குடி, பொங்காலப்பட்டி உள்ளிட்ட ஊர்களில் துணை சுகாதார நிலையங்களுக்குப் புதிய கட்டடங்களை நம் திராவிட மாடல் அரசு முதலமைச்சர் கட்டிக் கொடுத்திருக்கிறார்.

விராலிமலை, தென்னம்பாடி, நீர்ப்பழனி, மாதுராப்பட்டி உள்ள ஊர்களில் பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

### இல்லாதபோதே பல சாதனைகள்

நம் சட்டமன்ற உறுப்பினர் இல்லாதபோதே நம் திராவிட மாடல் அரசு இந்த விராலிமலைக்கு இவ்வளவு பணிகளை நாம் செய்து கொடுத்திருக்கிறோம். நம் சட்டமன்ற உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டால், இன்னும் பல்வேறு திட்டங்களை, இன்னும் பல்வேறு பணிகளை இந்த விராலிமலை சட்டமன்றத் தொகுதிக்கு, நம் முதலமைச்சர் அவர்கள் நிச்சயம் செய்து கொடுப்பார். அந்த வாக்குறுதியை, நான் கொடுக்கிறேன். நீங்கள் ஒரு வாக்குறுதி கொடுங்கள், அண்ணன் செல்லப்பாண்டியன் அவர்களை உதயசூரியன் சின்னத்தில் வெற்றி பெறச் செய்து சட்டமன்றத்துக்கு அனுப்புவோம் என்ற வாக்குறுதியை நீங்கள் கொடுங்கள்.

### புதிய கோரிக்கைகள்

நம் செல்லப்பாண்டியன் அண்ணன் வரும்போது சொன்னார், நிச்சயம் நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையப்போவது உறுதி. மீண்டும் நம் தலைவர்தான் முதலமைச்சர் நாற்காலியில் அமரப்போகிறார். அப்படி உட்காரும்போது எனக்கு இன்னும் சில கோரிக்கைகளை நான் வைக்கிறேன், இதெல்லாம் நம் ஆட்சி வந்தவுடன் நீங்கள் செய்து கொடுக்க வேண்டும் என்று சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்.

விராலிமலையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கப்பட வேண்டும். திருநல்லூர், கட்டாக்குடி உள்ளிட்ட ஊர்களில் புதிய சமுதாய நலக்கூடங்கள் வேண்டும்.

விராலூர் ஊராட்சியில் திருச்சி தேசிய நெடுஞ்சாலையிலிருந்து சிவன் கோயில் வரைக்கும் சாலை அமைத்துத் தர வேண்டும்.

அன்னவாசல், இலுப்பூர், விராலிமலையில் மருத்துவமனைகளை மேம்படுத்த வேண்டும். தென்னலூரில் ஜல்லிக்கட்டு மைதானம் அமைக்க வேண்டும்.

விட்டமாப்பட்டியிலிருந்து தொப்பட்டியாதபுரம் வரைக்கும் 15 கிலோமீட்டருக்குத் தார்ச் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

தேராவூரில் உள்ள தெருக்களில் சிமெண்ட் சாலை போட வேண்டும். நார்த்தாமலை, சித்தன்னவாசல், அன்னவாசல் வழியாகக் கீரனூர், இலுப்பூருக்குப் புதிய பேருந்து வழித்தடம் வேண்டும்.

விளத்துப்பட்டி ஊராட்சியில் ஊருணியைத் தூர்வாரி பராமரிக்க வேண்டும்.

மிக முக்கியமான கோரிக்கை, புதுக்கோட்டை மக்களின் நீண்ட நாள் கோரிக்கை.

பெரும்பிடுகு முத்தரையர், மாமன்னன் மருது பாண்டியர், வீரன் அழகுமுத்துக்கோன், வ.உ.சிதம்பரனார் ஆகியோருக்கு உரிய மரியாதை கொடுத்து மணிமண்டபம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வைத்திருக்கிறீர்கள்.

நிச்சயமாக நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்தவுடன் இந்த கோரிக்கைகளையெல்லாம் நம் முதலமைச்சர் அவர்கள் இந்த விராலிமலை சட்டமன்றத் தொகுதிக்கு நிச்சயம் செய்து கொடுப்பார் என்ற உறுதிமொழியை, வாக்குறுதியை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். இன்று நாம் சொன்னதையெல்லாம் நம் முதலமைச்சர் அவர்கள் செய்து காட்டி இருக்கிறார்.

### விடியல் பயணத் திட்டம்

கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு என்னென்ன வாக்குறுதி கொடுத்தோமோ அதையெல்லாம் இன்று நிறைவேற்றி இருக்கிறார். உதாரணத்துக்கு கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது நாம் சொன்ன மிக மிக முக்கியமான வாக்குறுதி, பெண்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்துத் திட்டம், விடியல் பயணத் திட்டம் கொடுப்போம் என்று சொன்னோம். நாம் ஆட்சிப் பொறுப்பேற்று, முதலமைச்சராகப் பொறுப்பேற்று நம் முதலமைச்சர் போட்ட முதல் கையெழுத்து பெண்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்துத் திட்டம்தான். அந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரைக்கும் சேமித்திருக்கிறார்கள்.

குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வர வேண்டும். பள்ளிக்கூடத்துக்கு வரும்போது காலையில் பசியோடு இருக்கக் கூடாது என்று நம் முதலமைச்சர் கொண்டு வந்ததுதான் முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் பயிலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் இன்று காலையில் பள்ளிக்கூடத்துக்கு வந்தால் முதலில் தரமான காலை உணவு, அதன் பிறகு தரமான கல்வியைக் கொடுத்திருக்கிறோம்.

### தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டம்

கல்லூரிக்கு வர வேண்டும், மேற்படிப்பு படிக்க வேண்டும் என்று கல்வி உதவித் தொகை கொடுத்திருக்கிறோம். அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும், தனியார் கல்லூரியாக இருந்தாலும் அவர்களுக்கு தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டங்களின் மூலம் கல்வி ஊக்கத் தொகை 1000 ரூபாய் வழங்கப்படுகிறது. 13 லட்சம் மாணவ, மாணவிகளுக்குக் கல்வி ஊக்கத் தொகையைக் கொடுத்திருக்கிறோம்.

10 லட்சம் மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி திட்டத்தை அறிவித்து ஒரே மாதத்தில் 10 லட்சம் மடிக்கணினிகளை நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

இன்று அதி.மு.க ஒரு பொய்ப் பிரச்சாரத்தை நடத்தி வருகிறார்கள். இந்த மடிக்கணினி திட்டம் அவர்கள் கொண்டு வந்த திட்டம், அதை நாம் முடக்கிவிட்டோம் என்று சொல்கிறார்கள், தேர்தலுக்காகக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

உண்மைதான், அ.தி.மு.க-தான் இந்த திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால், அவர்கள் பள்ளிக்கூடம் படிக்கிற குழந்தைகளுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். 2019-ஆம் ஆண்டு அந்தத் திட்டத்தை அ.தி.மு.க அரசு கைவிட்டுவிட்டது. ஆனால், நம் முதலமைச்சர் பார்த்தார், இந்த மடிக்கணினி கல்லூரி படிக்கிற மாணவர்களுக்கு இன்னும் பயனுள்ளதாக இருக்கும்; மேற்படிப்பு படிக்க, ஒரு இடத்தில் வேலையில் சேர, திட்டப்பணிகளைத் தயார் செய்ய என்று கல்லூரி மாணவர்களுக்கு கொடுத்தால் அதிகமாகப் பயனுள்ளதாக இருக்கும் என்று 10 லட்சம் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு இன்று மடிக்கணினியை நாம் கொடுத்திருக்கிறோம்.

### மகளிர் உரிமைத் தொகை

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது நாம் சொன்ன முக்கியமான வாக்குறுதி. கடந்த மூன்று ஆண்டுகளாக ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் கொடுத்திருக்கிறார் நம் முதலமைச்சர். இன்று அந்த உரிமைத் திட்டத்தை எப்படியாவது தேர்தலைக் காரணம் காட்டி நிறுத்திவிட வேண்டும் என்று அ.தி.மு.கவும் பா.ஜ.க-வும் ஒரு சதித் திட்டம் போட்டார்கள். நீதிமன்றத்துக்கு சென்று மூன்று மாதத்துக்கு நிறுத்த வேண்டும் என்று முயற்சி செய்தார்கள். ஆனால் நம் தலைவர் அந்தச் சூழ்ச்சியையெல்லாம் முறியடித்து, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதம் என மூன்று மாதத்துக்குச் சேர்த்து 3,000 ரூபாய், கோடைக்கால சிறப்பு நிதி 2,000 என்று 5,000 ரூபாய் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு நம் முதலமைச்சர் கொடுத்தார். நம் முதலமைச்சர் கொடுத்தார்.

நம் முதலமைச்சர் காலையில் 6:30 மணிக்கே அனைவருடைய வங்கிக் கணக்கிலும் செலுத்திவிட்டார். ஆனால் நம் மகளிர் என்ன செய்தார்கள்? காலையில் 9 மணிக்கெல்லாம் வங்கிக்கு சென்று பணத்தை எடுத்துவிட்டார்கள். என்ன காரணம்? மோடி அரசின் மீது அவ்வளவு நம்பிக்கை! எங்கே மோடி வங்கியில் மினிமம் பேலன்ஸ் இல்லை என்று சொல்லி முதலமைச்சர் கொடுத்த 5,000 ரூபாயையும் அவர் எடுத்துவிடுவாரோ என்கின்ற பயத்தில் மகளிர் அப்படிச் செய்தார்கள்.

### புதிய வாக்குறுதிகள்

இன்று நம் தலைவர் முதலமைச்சர் ஒரு வாக்குறுதி கொடுத்திருக்கிறார். மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்தவுடன் மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாயை அதிகப்படுத்தி 2,000 ரூபாய் கொடுப்பேன் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் ஐந்தாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும் என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறோம். கல்வி ஊக்கத் தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,500-ஆக உயர்த்தப்படும் என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறோம். முதியோர் உதவித்தொகை 1,200-லிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தித் தருவோம் என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறோம். அடுத்த ஐந்து ஆண்டுகளில் அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கும் 35 லட்சம் இலவச மடிக்கணினிகள் கொடுப்போம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் கலைஞர் கனவு இல்லம், 10 லட்சம் கலைஞர் கனவு இல்லம் கட்டப்பட்டு யார், யாருக்கெல்லாம் வீடு இல்லையோ அனைவருக்கும் வீடு கொடுக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

ஆட்சி அமைந்தவுடன் நம் முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மகளிரிடமும் 8,000 ரூபாய் மதிப்புள்ள ஒரு கூப்பன் கொடுத்துவிடுவார். அந்தக் கூப்பனை வைத்து மகளிர் அவர்கள் வீட்டிக்கு என்ன தேவையோ, என்ன மின்சார சாதனம் தேவையோ, பிரிட்ஜ் வேண்டும் என்றால் பிரிட்ஜ், டிவி வேண்டும் என்றால் டிவி, ஏசி வேண்டும் என்றால் ஏசி, குக்கர் வேண்டும் என்றால் குக்கர் - உங்களுக்கு என்ன தேவையோ முதலமைச்சர் சொல்லிவிட்டார், மகளிர் அவர்கள் வீட்டுக்கு என்ன தேவையோ அவர்களே முடிவெடுத்துக் கொள்ளலாம் என்று முதலமைச்சர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

இவ்வளவு திட்டங்களும் நிறைவேற வேண்டும் என்றால் மீண்டும் நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய வேண்டும். அதற்கு அண்ணன் செல்லப்பாண்டியன் அவர்களை இந்த விராலிமலை சட்டமன்றத் தொகுதியிலிருந்து நீங்கள் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும்.

நான் இவ்வளவு நேரம் பேசியபோது, என்னென்ன திட்டங்களைக் கடந்த ஐந்து ஆண்டுகளில் செய்திருக்கிறோம் என்பதைச் சொன்னேன். ஆட்சிக்கு வந்தால், நம் முதலமைச்சர் அவர்கள் என்னென்ன செய்வார் என்பதையும் சொன்னேன். இந்தத் தொகுதிக்கு என்னென்ன பண்ணியிருக்கிறோம் என்பதைச் சொன்னேன், ஆட்சிக்கு வந்தால் என்னென்ன பண்ணுவோம் என்பதை உங்களிடம் சொல்லியிருக்கிறேன்.

### முதன்மை மாநிலம் தமிழ்நாடு

இவ்வளவு திட்டங்களைச் செய்ததால்தான் இன்று தமிழ்நாடு இந்தியாவிலேயே, வளர்கின்ற மாநிலங்களில் முதன்மை மாநிலம் தமிழ்நாடு. 11.19 சதவிகித வளர்ச்சியோடு இன்று தமிழ்நாடு முதலிடத்தைப் பிடித்திருக்கிறோம்.

நாம் இவ்வளவு செய்திருக்கிறோமே, ஒன்றிய பா.ஜ.க அரசு இதற்கு ஏதாவது தமிழ்நாட்டுக்கு, நம் தமிழ் மக்களுக்குத் துணையாக நின்றிருக்கிறார்களா? நமக்கு ஏதாவது புதிதாகத் திட்டம் கொடுக்கிறார்களா? எந்தத் திட்டமும் கொடுப்பதும் இல்லை, நாம் கேட்கின்ற நிதி உதவியும் கொடுப்பதும் இல்லை. ஆனால் என்ன செய்கிறார்கள்? மும்மொழிக் கொள்கை என்று சொல்லி, மீண்டும் இந்தியை தமிழ்நாட்டுக்குள் திணிக்க முயற்சிக்கிறார்கள். எந்தத் திட்டமும் வருவது இல்லை. கடந்த பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு என்று எந்தப் புதிய திட்டமும் இல்லை, தமிழ்நாடு என்கின்ற பெயரே பட்ஜெட்டில் இல்லை. அப்படிப்பட்ட பா.ஜ.க-விற்கு நாம் சரியான பாடத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

### நம்பர் ஒன் முரட்டு அடிமை

பா.ஜ.க-வை தமிழ்நாட்டிற்குள் நாம் நுழைய விடமாட்டோம் என்று தெரிந்துதான் அ.தி.மு.க என்கின்ற போர்வைக்குள் ஒளிந்து கொண்டு இன்று பா.ஜ.க வருவதற்கு முயற்சி செய்கிறது. நம் தலைவர் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார். இந்தச் சட்டமன்றத் தேர்தல் டெல்லி அணிக்கும் தமிழ்நாடு அணிக்கும் தான். நாம் தமிழ்நாடு அணி. டெல்லி அணியை இந்த முறை மீண்டும் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்புவோம். ஏன் டெல்லி அணி என்று சொல்கிறோம்? டெல்லி அணியில் யார் யார் இருக்கிறார்கள்? மோடி, அவருக்குத் துணையாக எடப்பாடி பழனிசாமி.

எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு இப்போது நான் ஒரு செல்லப் பெயர் வைத்திருக்கிறேன். முரட்டுப் பக்தர்கள் பார்த்திருப்பீர்கள், முரட்டுத் தொண்டர்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள், எங்கேயாவது முரட்டு அடிமையைப் பார்த்திருக்கிறீர்களா? எடப்பாடி பழனிசாமி அவர்கள்தான் இன்று இந்தியாவிலேயே மோடியின் நம்பர் ஒன் முரட்டு அடிமை. மோடி என்ன சொன்னாலும் கேட்பார். ஆம், மோடி, ‘இங்கே வா’ என்றால், இங்கிருந்து டெல்லிக்கு ஓடியே போவார். அப்படிப்பட்ட ஒரு முரட்டு அடிமையை வைத்திருக்கிறார். அந்த அடிமைக் கூட்டத்துக்கு இந்தத் தேர்தலோடு ஒரு முடிவு கட்டுவோம். ஏற்கனவே 10 தோல்விகளைப் பழனிசாமிக்குக் கொடுத்திருக்கிறோம். இந்த முறை மொத்தத் தோல்வி பழனிசாமியாக்கி அவரை வீட்டுக்கு அனுப்புவோம்.

### வீட்டுக்கு அனுப்ப வேண்டிய தேர்தல்

‘ஜாடிக்கேற்ற மூடி ’ என்று ஊரில் ஒரு பழமொழி சொல்வார்கள். அது மாதிரி இன்றைக்கு மோடிக்கேற்ற ஒரு அடிமையாக எடப்பாடி பழனிசாமி அவர்கள் இருக்கிறார். எடப்பாடி பழனிசாமி அவர்களையும் அவரோடு கூட இருக்கக்கூடிய அடிமைக் கூட்டத்தையும் இந்தத் தேர்தலோடு வீட்டுக்கு அனுப்ப வேண்டிய தேர்தல் வரப்போகும் சட்டமன்றத் தேர்தல். நம் தலைவர் சொன்னது போல தமிழ்நாட்டை எப்படியாவது எடப்பாடி பழனிசாமி என்கின்ற இந்த ரிமோட் கண்ட்ரோல் மூலமாக டெல்லியிலிருந்து கட்டுப்படுத்த நினைக்கிறார்கள். அந்த ரிமோட் கண்ட்ரோலை உருவிவிட்டு, பியூஸை பிடுங்கி விட்டுவிட வேண்டும்,

செய்வோமா? நாம் இந்த முறை மீண்டும் நிரூபித்துக் காட்டுவோம். தமிழ்நாடு என்றைக்குமே டெல்லிக்குக் அவுட் ஆப் கண்ட்ரோல் என்பதை இந்தத் தேர்தலில் நிரூபித்துக் காட்ட வேண்டும். செய்வோமா?

இன்று தேதி 5, 23-ஆம் தேதி தேர்தல். இன்னும் 18 நாட்கள் இருக்கின்றன. உதயநிதி வந்தார், பேசினார், திட்டங்களைப் பற்றிச் சொன்னார், வாக்குறுதிகள் கொடுத்திருக்கிறார், கலைந்து போய்விட்டோம் என்று நாம் யாரும் போய்விடக் கூடாது. நீங்கள் அனைவரும் முடிவு செய்துவிட்டீர்கள், உதயசூரியன் சின்னம்தான் வெற்றிச் சின்னம், இந்தத் தேர்தலில் விராலிமலையில் வெற்றிப்பெறபோவது உதய சூரியன் சின்னம் என்று நீங்கள் முடிவு செய்து விட்டீர்கள்.

நான் உங்களிடம் கேட்பதெல்லாம் அடுத்த 18 நாட்கள் இந்தப் பிரச்சாரத்தை நீங்கள் இருக்கக்கூடிய பகுதிகளில் கொண்டு சேர்க்க வேண்டும். ஒவ்வொரு பகுதியாகப் செல்ல வேண்டும், ஒவ்வொரு தெருவாக செல்ல வேண்டும், ஒவ்வொரு வீடாக செல்லுங்கள், ஒவ்வொரு வாக்காளரையும் சந்தியுங்கள். அவர்களிடம் சொல்லுங்கள், நம் தி.மு.க ஆட்சி இந்த ஐந்து ஆண்டுகளில் என்னென்ன திட்டங்களைப் செய்துக் கொடுத்திருக்கிறோம், வந்தால் என்ன செய்வோம், மீண்டும் அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணி தமிழ்நாட்டுக்குள் வந்துவிட்டது என்றால் என்னென்ன தீங்குகள் தமிழ்நாட்டுக்கு வரும், என்னென்ன உரிமைகளையெல்லாம் விட்டுக்கொடுப்பார்கள் என்கின்ற இந்தப் பிரச்சாரத்தை மக்களிடம் நீங்கள் கொண்டு சேர்த்தீர்கள் என்றால், கடந்த முறை கிட்டத்தட்ட 20,000 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டோம். இந்த முறை 25,000 அல்ல, 50,000 வாக்கு வித்தியாசத்தில் அந்த வெற்றியை நாம் பிடிக்க வேண்டும்.

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாக, பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், நம் தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், முத்தமிழறிஞர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன். உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து அண்ணன் செல்லப்பாண்டியன் அவர்களை விராலிமலை சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக நீங்கள் தேர்ந்தெடுத்தீர்கள் என்றால், நம் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் இந்தத் தொகுதிக்கு, இந்தப் பகுதிக்கு என்னென்ன தேவையோ, நிச்சயம் நம் முதலமைச்சர் அவர்கள் செய்து காட்டுவார். அடிமைக் கூட்டத்தை ஓட ஓட விரட்டுவோம்.

உங்கள் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி நன்றி.

ஆதரிப்பீர் உதயசூரியன் என்று தெரிவித்தார்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.